1972 மார்ச் 11]

திருப்பூர் குமாரனின் வீடு

*426. **வினா—திரு. சு. துரைசாமி**: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விடுதலை வீரர் திருப்பூர் குமரன் குடியிருந்த வீட்டை வாங்கி நினைவுச் சின்னம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) இல்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இதற்குப் பொதுமக்கள் முயற்சியெடுக்க வேண்டும்.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, அறிஞர் அண்ணாவிற்கு ஒரு நினைவுச் சின்னமாகப் போற்றும்வகையில் காஞ்சியில் உள்ள இல்லத்தை வாங்கி நினைவுச்சின்னம் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது வேறு கேள்வி.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், பொதுவாக தமிழகத்திலே திருப்பூர் குமரன் என்றாலே கொடி காத்த குமரன் என்று நாடு பூராவும் பரவியிருக்கும் நேரத்தில், அவருடைய வீடு வெகு சிறிய வீடுதான், அவருடைய மனைவிதான் இருக்கிறார்கள், அவர்களுக்கு ஏற்பாடு செய்து அந்த வீட்டை எடுப்பதால் நல்ல காரியமாக இருக்கும் என்ற முறையில் இதை அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பொதுவாக தொல்பொருள் ஆராய்ச்சித்துறையினர் வரலாற்றுச் சிறப்படைய, கலைச் சிறப்புடையவைகளையும் மற்றவைகளையும் தான் பாதுகாக்கும் வகையிலே பெரும்பாலும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஈடுபட்டு காப்பாற்றி வருகிறார்கள். சுமார் 100 ஆண்டு காலத்திற்கு முன்பு வாழ்ந்த முக்கியமானவர்களின் பழமைப் பொருட்களைக் காப்பாற்ற அந்த இலாக்காவில் இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட போர் வீரர்கள், நாட்டுக் குழைத்தவர்கள் போன்றவர்களைப் போற்றும் வகையில் நினைவுச் சின்னங்கள் எழுப்புகின்ற முயற்சியில் சிலை வைப்பது அல்லது

வேறு நினைவுச் சின்னங்கள் எழுப்புவது என்ற முறையில் அதற்கென்று பொதுமக்கள் குழு அமைக்கப்பட்டு நினைவுச் சின்னங்கள் திறக்கப்பட்டு, பாதுகாக்கும் பொறுப்பு அந்தந்த நகராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. சிலைகள், மற்றவைகளுக்கான பராமரிப்புச் செலவை அந்தக் குழுவினரிடமிருந்து நகராட்சி மன்றங்களில் பெறுகிறார்கள். அந்த வகையில் குழு அமைத்து, திருப்பூரில் அந்த முயற்சியைச் செய்து நினைவுச் சின்னத்தை அங்கே அமைத்தால் அதைப் பராமரிக்கின்ற பொறுப்பை நகராட்சி மன்றம் மேற்கொள்வதற்கு முயற்சிக்கலாம். திருப்பூரில் திருப்பூர் குமரனுக்கென்று சிலபல நினைவுச் சின்னங்களை வைத்திருக்கிறார்கள். இந்த முயற்சியிலும் பொதுமக்கள் ஒத்துழைத்தால் நகராட்சி மன்றமும் ஒத்துழைக்கலாம்.

கரக ஆட்டம்.

*427. **வினா—திரு. பி. எஸ். மணியன்**: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நம் நாட்டில் சிறந்து விளங்கும் கரக ஆட்டக்காரர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி நமது கலை நுணுக்கத்தை வெளிப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சங்கீத நாடகக் கழகம் இதற்கான பரிந்துரைகளைச் செய்தால், அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. எஸ். மணியன்: தலைவரவர்களே, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே தலைசிறந்த கரக ஆட்டக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இப்போது இலங்கை, மலேயா போன்ற நாடுகளுக்கு தங்கள் சொந்தப் பொறுப்பிலே சென்று வருகிறார்கள். மகத்தான வரவேற்பு அந்த ஆட்டங்களுக்கு அங்கே இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். ஆகவே, அரசு சார்பிலே அமெரிக்கா, ரஷ்யா போன்ற பெரிய நாடுகளுக்கெல்லாம் அவர்களை அனுப்பி வைத்து நம்முடைய பண்டைய நுணுக்கமான தலைசிறந்த ஆட்டமான இந்தக் கலையைப் பரப்புவதற்கு அரசே நேரடியாக தலையிட்டு ஆவன செய்யுமா?